**JSC-6-TA**

# கிறிஸ்துவின் நியாயாசனத்தில் நீங்கள் பெறப்போகிற இழக்க போகிற பலன்கள்

# - நிகழ்ச்சி 6

**அறிவிப்பாளர்**: கிறிஸ்தவர்களுக்கு வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, "நாம் அனைவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிச்சயமாக நிற்கவேண்டியிருக்கும்." ஆனால் இந்த நியாயதீர்ப்பிற்கான நோக்கம் என்ன? இயேசு நம்முடைய பாவத்திற்கான கிரையத்தை செலுத்தி விட்டாரா தேவன் அவைகளை நினைவு கூறுவது இல்லையா?

அப்படியானால், கிறிஸ்தவர்கள் ஏன் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு நிற்கவேண்டும்? இந்த நியாயதீர்ப்பிற்கும் இரட்சிப்பிற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா. இரட்சிப்பு என்பது ஒரு நபர் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுகொள்ளும்போது அவனுக்கு அளிக்கப்படுகிற இலவசமான ஈவாகும்.

ஆனா கிறிஸ்துவின் நியாசனம் என்பது அவர் நம்மை இரட்சித்ததற்கு பிறகு நாம் வாழும் முறையை சார்ந்து இருக்கிறது. கிறிஸ்துவுக்காக

நாம் செய்திட்ட அணைத்தும் அன்று பதிப்பிடபட்டு பலனளிக்கப்படுகிறது.

வேதம் சொல்கிறது, "ஏனென்னில் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது ஏற்ற பலனை அடையும்படிக்கு நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்".

நாம் அவருக்காக செய்த நற்க்கிரியைகளுக்காக கிறிஸ்துவிடம் இருந்து பலனை பெறுவோம் என்பது நமக்கு தெரியும், ஆனா இங்க வேதம் என்ன சொல்கிறது என்றால் நம்முடைய தீமைக்கும் பலன் பெருவோம் என்கிறதே? உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் பெருகிற பலன்களை உண்மையில்லாத கிறிஸ்தவர்கள் பெறமாட்டார்களோ?

ஆனா கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக கண்ணீர் இருக்க வாய்ப்பிருக்கிறதா? அங்கு பலன்களை இழக்க நேரிடுமா, பதிப்பையும் கனத்தையும் பரலோகத்தில் நித்தியமாக நமது ஸ்தானத்தை இழக்க வாய்ப்பு இருக்கிறதா?

இந்த கேள்விகளுக்கு வேதாகமத்தில் இருந்து விடைகளை பெற்றுக்கொள்ள நமக்கு உதவியாக இன்றைக்கு Dr. எர்வின் லட்சர் நம்முடன் இருக்கிறார், மூடி திருச்சபையின் மூத்த போதகர் சிக்காகோ, இல்லினோசிஸ். நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: வணக்கம். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்தால், நிச்சயமாக இந்த வாழ்கையின் முடிவில் நாம் இந்த உலகத்தை விட்டு கடந்து சிறந்த ஒரு இடத்திற்கு போக போகிறோம் என்கிற எண்ணத்தோடு இருப்பீர்கள் அதுதான், பரலோகம். அங்க எந்த பாவமும் இருக்காது, தீங்குகள் இல்லை, மரணம் இல்லை, வியாதியோ மரணமோ இல்லை, சரிதான? ஆனால் வேதம் இன்னொன்றையும் சொல்கிறது, “நாம் அனைவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டி இருக்கிறது, நாம் மாம்சத்தில் இருக்கும்போது செய்த நன்மையானவை தீமையானவைகளுக்கு கணக்கு கொடுக்க வேண்டும்.” இந்த வசனத்தை படிக்கும்போது ஒரு கேள்வி நினைவிற்கு வருகிறது “உங்களுடைய கிறிஸ்தவ வாழ்வில் தேவன் நிறைய தீமையானவைகளை பார்ப்பாரானால், அதாவது, நீங்க கிறிஸ்துவுக்காக உண்மையா வாழல; உங்களுக்காக சுயநலத்தோட இருந்திருந்தா - கிறிஸ்து உங்கள் வாழ்க்கையை மதிப்பிடும்போது அவர் பார்க்கிற விதமாக நீங்களும் பாருங்க, அப்ப அங்க பரலோகத்தில் கண்ணீரும் வருத்தமும் இருக்க நேரிடுமா? இந்த முக்கியமான கேள்வியை எனது விருந்தினரிடம் கேட்கிறேன், Dr. எர்வின் லட்சர், சிக்காகோ மூடி திருச்சபையின் மூத்த போதகர், இல்லினோசிஸ். அவர் சொல்வதை கேட்பதற்கு நீங்களும் ஆர்வமாக இருக்கிறீர்கள் என நினைக்கிறேன்: கவனிங்க.

**டாக்டர். எர்வின் லட்சர்:** சரி, பரலோகத்தில் கண்ணீர் இருக்குமா என்று சொல்லும்போது, அந்த மாதிரி ஒன்று இருக்க வாய்ப்பில்லை என்பது போல தோன்றிடலாம். ஆனா வெளிப்படுத்தல் 21ம் அதிகாரத்தில் கவனித்து பாருங்க. அங்க சொல்லப்பட்டு இருக்கிறது, "கர்த்தர் தாமே அவர்கள் கண்ணீர் யாவையும் துடைப்பார்." அங்க கண்ணீர் இல்லைன்னா அவர் துடைப்பதற்கு அங்க அவசியம் இருக்காதே. இப்ப கேள்வி இதுதான், ஏன்?

சிலர் நினைக்கிறார்கள், சரி, ஒருவேளை பிரியமானவர்கள் நரகத்தில் இருப்பதால் அழுதிடலாம். அப்படியும் இருக்கலாம் ஆனா அந்த நேரத்துல எல்லாத்தையும் கர்த்தருடைய கண்ணோட்டத்தின் படி பார்ப்போம் என்று தான் நினைக்கிறேன். தேவன் ஒருவேளை சந்தோஷமாக இருந்தாருன்னா, நாமும் நித்தியமாக சந்தோஷமா இருப்போம். இந்த கண்ணீர் இப்படி செய்யாம இருந்திருக்கலாமே என்று நினைக்கிற கண்ணீர்தான். இயேசு நமக்கு கொடுத்த ஆசீர்வாதத்தின் ஒளியில் நாம வாழ்ந்த வாழ்க்கையை பற்றி நாம நினைத்து பார்போம், அவர் தமது இரத்தத்தை சிந்தி நம்மை விலைகொடுத்து வாங்கினார், அதை யோசிக்கும்போது பல சூழ்நிலைகளில் நமக்கு பிடித்த விதத்தில் நாம் வாழ்ந்திருக்கிறோம். நாம இழந்தவைகளை நினைக்கும்போது, நாம சொர்கத்தின் வாசலின் மறுபக்கத்தில் நின்று கண்ணீர் சிந்த வாய்ப்பிருக்கு., ஆனா, கவனிங்க, நாம என்றென்றைக்குமாய் அழுவதில்லை ஏன்னா நம்முடைய

கண்ணீர் எல்லாம் துடைக்கப்படுகிறது ஒருவேளை கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நாம நல்லா பதில் சொல்லாவிட்டாலும், பரலோகத்தில் எல்லாரும் சந்தோஷமா இருக்கனுன்றதுல தேவன் கருத்தாக இருப்பார், எல்லாரும் தேவனை தொழுதுகொள்ளுவோம். ஆனா எல்லாருக்கும் ஒரேவிதமான சிலாக்கியங்களும் பொறுப்புகளும் இருக்குன்னு சொல்ல முடியாது,

அதாவது, ஜான், இன்னொரு கேள்வியையும் கேட்பாங்க, ‘சரி, பரலோகத்தில் நமக்கு மேல இருக்கிறவங்கள பார்த்து பொறாமை படுவோமா?” ஜோனத்தான் எட்வர்ட் பதில் எனக்கு ரொம்ப பிடிக்கும். அவர் சொல்றார், இல்ல, அப்படி இல்ல. ஏன்னா நாம பொறாமையிலிருந்து விடுவிக்கப்பட்டிருப்போம், மற்றவர்களுடைய வெற்றியை பார்த்து நாமே வெற்றிபெற்றது போல நினைத்து சந்தோஷப்படும் உணர்வுகள் இருக்கும்.” அதனால நீங்க பரலோகம் போகும்போது, அங்க இரண்டுவிதமான மக்கள் இருக்கமாட்டாங்க: உணமையுள்ளவர்கள் உண்மையில்லாதவர்கள் என்றில்லை. நம்மில்ல அநேகர் ஏதாவது ஒரு கட்டத்தில் இடறலை பார்ப்பது சகஜம். ஆனா நாம இங்க எப்படி வாழ்கிறோம் எந்த மாதிரியான நபராக இருக்கிறோம் என்பது நிச்சயமா நித்தியத்தில் நான் எப்படிப்பட்டவர்களாக எந்தமாதிரியான ச்லாக்கியங்களை பெற்றிருப்போம் என்பதை தீர்மானிப்பதாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்**: எபேசியர் 2:10 பாருங்க: “ஏனெனில் நற்கிரியைகளை செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவின் செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.” நாம் எப்படி பட்ட நற்கிரியைகளை செய்யவேண்டும் என்பதற்கான சந்தர்ப்பங்களை தேவன் ஏற்கனவே ஆயத்தம் பண்ணியிருக்கிறார். நாம அவற்றை செய்யலைன்னா என்ன நடக்கும்? நா Dr. லட்சரிடம் இந்த வசனத்தை கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும் நிலையை வைத்து ஒப்பீடு சொல்லும்படியாக கேட்டுகொண்டேன். கவனிங்க:

**எர்வின் லட்சர்:** சரி, ஜான், முதலாவதாக, இந்த வசனத்தின் பகுதியை தியானிக்கும்போது, நம்முடைய நற்கிரியைகள் தேவனுக்கு ரொம்ப முக்கியமானது என்பது எனக்கு நினைப்பூட்டப்பட்டது. அவைகளை அவர் ஏற்கனவே ஆயத்தம் பண்ணிவைத்துவிட்டார். மேலும் உங்களுக்கு தெரியுமா, கிரேக்க வார்த்தையான பொய்மை என்பதிலிருந்து தான் போயம் என்ற வார்த்தை வருகிறது. நாம தேவனுடைய கவிதைகளாக இருக்கிறோம். அதாவது தேவன் ஏற்கனவே பரலோகத்தில் ஒரு கவிதையை உருவாக்கிவிட்டார் அதை இந்த பூமியில் நாம் வாழ்ந்து காட்டுகிறோம்.

இரண்டாவது காரியம் மிக எளிமையான ஒன்று:அதாவது உத்தமம், உண்மையில், இது ரொம்ப ரொம்ப முக்கியமானது அவருக்கும் சரி நமக்கும் சரி முக்கியமானது. குறிப்பா, நாம் சிருஷ்டிக்கப்பட்ட

நோக்கத்தை நாம் நிறைவேற்றிட வேண்டும். நினைவிருக்கட்டும் நாம முந்தைய நிகழ்ச்சியில் சொன்னது போல, தேவனுடைய நோக்கம் எல்லாம் சிருஷ்டிகரை போல சிருஷ்டிகள் தங்களால் இயன்ற அளவிற்கு செயல்படவேண்டும் என்பதே. அதாவது முன்னமே நிர்ணயிக்கப்பட்ட வழியில் நாம் நடக்க வேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது - இந்த கட்டத்துல இதெல்லாம் தேவனுடைய சித்தமா இருக்கிறதா இல்லையான்னு நம்ம ஆராய்ந்து பார்க்க அவசியமில்லை என்று தான் நான் நினைக்கிறேன் - என்னை பொறுத்தவரை அந்த கிரியைகள் எல்லாம் நீதியின் செய்கைகள் அதனால் இதை செவிலியர்களும் மருத்துவர்களும் வழக்குறைஞ்சர்களும் தொழிற்கூட ஊழியர்கள் குடும்ப பெண்கள் என்று எல்லாராலும் செய்ய முடிகிற வேலை தான். இந்த நீதியின் கிரியைகள் அனைத்தும் நம்முடைய வாழ்வில் கிறிஸ்துவின் கிரியைகளுக்கான கனிகளாக இருக்கிறது. அந்த நற்கிரியைகளில் நாம் நடக்க வேண்டும் அவை அனைத்திற்கும் நிச்சயம் பலனளிக்கப்படும்.

**ஆன்கர்பெர்க்**: சரி, இந்த செய்தி தொடரின் பல நிலைகளில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவோடு சேர்ந்து ஆளுகை செய்ய தகுதி உடையவர்களா இல்லையான்னு பார்த்துகொண்டு வருகிறோம். கிறிஸ்தவர்கள் பாத்திரவான்கள் என்று வேதம் சொல்லும்போது அது எதை குறிக்கிறது? கிறிஸ்துவுடனே ஆளுகை செய்யும்படிக்கு சிறந்த

பலனை பெறும்படிக்கு தகுதி அடைவது எப்படி? Dr. லட்சர் விளக்கமளிக்கிறார்:

**எர்வின் லட்சர்:** முதலாவதாக, இந்த கேள்வி எவ்வளவு முக்கியமானது என்பதை சொல்லனுன்னு நினைக்கிறேன் ஏன்னா இயேசு தாமே பாத்திரவான்களாக இருக்கிறோமா இல்லையான்றத பார்க்க போகிறவராக இருக்கிறார். அவருடைய வார்த்தைகளை கவனிங்க: "தன் தகப்பனையாவது தன் தாயையாவது என்னிலும் அதிகமாக நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல. தன் மகனையாவது தன் மகளையாவது என்னிலும் அதிகமாக நேசிக்கிறவன் எனக்கு பாத்திரன் அல்ல. தன் சிலுவையை சுமந்து கொண்டு என்னை பின்பற்றாதவன் எனக்கு பாத்திரனாக இருப்பது இல்லை என்றார்." பவுல் எபேசியர் புத்தகத்தில் சொல்லியிருக்கிறார் நாம் அழைக்கப்பட்ட அழைப்பிலே பாத்திரவான்களாக நடந்துகொள்ள வேண்டுமாம்."

சரி, இதற்கு என்ன அர்த்தம்? இதனுடைய அர்த்தம் மிக எளிமையானது எல்லாவற்றிலும் நாம் கிறிஸ்துவை பிரதிபளித்திட வேண்டும், நாம் அவருடைய பிரதிநிதிகளாக இருக்கிறோம் இந்த தனக்கு பதிலாக நம்மை இந்த உலகத்தில் நிறுத்தியிருக்கிறார் நம்மை பார்க்கிற ஜனங்கள் நிச்சயம் இயேசுவை பார்க்கிற உணர்வை அடையவேண்டும். அதுதான் முக்கியமான காரியம். அதனால பாத்திரமாயிருத்தல், என்பது, உண்மையில், வாழ்வின் வளர்ச்சியை குறிக்கிறது; அதாவது அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை முறை, விசுவாசத்தின் வாழ்க்கை,

ஒழுக்கத்தின் வாழ்க்கை. கிறிஸ்துவர்களை குறித்து நமக்கு தெரிந்த எல்லா குணங்களும் இந்த ஒரு வார்த்தையில் அடங்கியிருக்கிறது, “பாத்திரனாக நடந்துகொள்ளுதல்.” ஒருவேளை நீங்கள், அதாவது, நாம் இந்த செய்தி தொடரில் பார்த்துகொண்டு இருப்பது போல, நாம் பலனை பெற்றுக்கொள்வோம்.

**ஆன்கர்பெர்க்:** கிறிஸ்துவின் நியாயாசனத்தின் போது நாம் பெற்றுக்கொள்ள இருக்கிற பலன்கள் எல்லாம் கிறிஸ்துவுக்காக நாம் செய்த ஒவ்வொரு கிரியைகளுக்கான தனிதனி பலன்களாக இருக்குமா? அதாவது, இவ்வளவு காலம் தொடர்ந்து வேலை செய்தால் இவ்வளவு பலன் நமக்கு கிடைக்குமா? அதற்கான பதில், இல்லை. இந்த மாதிரியெல்லாம் அங்க இல்ல. தேவன் நம்முடைய நிலைக்கு மிஞ்சின நிலையில் நம்மை ஆசீர்வதிப்பதாக வாக்கு பண்ணியிருக்கிறார். கவனிங்க:

**எர்வின் லட்சர்:** மறுபடியும், ஜான், பலன்கள் என்பது சாதாரணமாக ஒரு வேலை செய்தால் கிடைக்கும் கூலி அல்ல என்பதை நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, ஒரு வாரம் வேலை செய்தபிறகு உங்க வேலைக்கான காசோலை கொடுக்கப்படும். அந்த மாதிரி இங்க கிடையாது. இயேசு கிறிஸ்து, முதலாவது, அவர் உதாரத்துவமாக நமக்கு பலனை அளிக்கிறவராக இருக்கிறார். இந்த பலன்களை நான்தான் சம்பாதித்தேன் என்று சொல்ல எந்த வழியும் கிடையாது.

அதனால இதைதான் முதலில், நாம நல்லா வலியுறுத்தி சொல்ல வேண்டி இருக்கு.

இரண்டாவதாக, சரி, ஒருவர் உண்மையாக இருந்து தேவனை பலவருடங்களாக உத்தமாய் தொழுதுகொண்டு ஊழியம் செய்து வருகிறவர்களுக்கு அவருடைய ராஜ்யத்தில் பிந்தி வந்தவர்களைவிட பலன் அதிகமாக இருக்கும், ஆனா முந்தைய நிகழ்ச்சியில் அந்த உவமையை குறித்து நாம விளக்கமாக பார்த்தோம், பிந்தி வந்தவர்கள் கூட தங்கள் கற்பனைக்கு எட்டாத பலனை பெறுகிறவர்களாக இருக்கிறார்கள். ஞாபகமிருக்குதா காலையில் இருந்து வேலை செய்துகொண்டிருந்தவர்கள் எல்லாரும், அவர் நமக்கு நிறைய கொடுப்பார் என்று நினைத்திருந்தார்கள் அவர்கள் மனப்பான்மை தவறாக இருந்தது. அங்க அவங்க ஒரு தீர்மானத்தோடு தான் வந்திருந்தார்கள், எங்களுக்கு கூலி கொடுக்காதவரைகும் நாங்க திராட்சை தோட்டத்திற்குள் நுழைய மாட்டோம்." சிலர் அந்த எஜமானின் மீதி நம்பிக்கை வைக்க முன்வந்ததால் அவர் அவர்களுக்கு உதாரத்துவமாக கொடுகிறார்.

நியாயாசனத்தில் வீற்றிருப்பவர் குறிப்பாக ஒரு நபருக்கு என்ன செய்வார் என்று தீர்மானமாக சொல்ல முடியாது. அதாவது, அப்போஸ்தலர் பவுல் சொல்கிறார் 1 கொரிந்தியர் நான்காம் அதிகாரத்தில், அவர் சொல்கிறார், எனக்கு எதிராக எனக்கு ஒன்றுமே இல்லை. எனக்கு தெரிந்தவரைக்கும், என்னுடைய மனசாட்சி சுத்த

மனசாட்சியாக இருக்கிறது. ஆனா, அவர் சொல்றாரு, “என்னை நானே நியாயந்தீர்த்திட முடியாது. கர்த்தர் தாமே நியாயந்தீர்க்கிறவராக இருக்கிறார்.” அதனால சில விஷயங்களை நாம அவருடைய கரத்தில் விட்டுவிடவேண்டும். நம்முடைய பொறுப்பு என்னன்னா அவர் நம்மிடம் கொடுத்திருக்கும் பொறுப்புகளை நேர்த்தியாக செய்திடணும் அவரை நமது முழு இருதயத்தோடும் நாம் நேசிக்க வேண்டும் அவ்வளவுதான்.

**ஆன்கர்பெர்க்**: சரி, தங்களுடைய இருதயத்தில் தேவனுக்காக எதையாகிலும் செய்ய வேண்டும் என்று எண்ணம் இருந்தும் அதை செய்து முடிபதற்கு முன்பு மரணத்தை எதிர்கொள்ளும் கிறிஸ்தவர்களின் நிலை என்ன? கிறிஸ்துவுக்காக மேலான காரியங்களை செய்ய வேண்டும் என்று நினைத்தும் செய்யமுடியாத கிறிஸ்தவர்கள் நிலை என்ன? ஒருவேளை சரியான சந்தர்ப்பம் கிடைக்காம இருந்திருக்கலாம்; அதற்கேற்ற சூழ்நிலை அமையாம இருந்திருக்கலாம்; அல்லது அந்த இலக்கை அடைவதற்கான தாலந்து இல்லாம இருக்கலாம்? கர்த்தருக்காக ஒரு மில்லியம் டாலர் கொடுக்க விரும்பம் இருந்தும் அதற்கேற்ற வருமானம் இல்லாத கிறிஸ்தவர்களின் நிலை என்ன? பெரிய தொகை கொடுக்க முடியாததால அப்படி பட்ட ஜனங்கள் ஏதாவது அதிகமாக கட்டவேண்டியிருக்குமா, அவர்கள் இலக்கை அவர்கள் அடைவது

இல்லையே? இந்த கேள்விகளுக்கான பதில் ரொம்ப முக்கியமானது. கவனிங்க:

**எர்வின் லட்சர்:** ஆமா, ஜான், தேவன் நம்முடைய இருதயத்தை பார்க்கிறார் என்பதை எடுத்துசொல்லும் வசனங்களை முன்வைக்க வேண்டியது ரொம்ப முக்கியம்; அவருக்கு எல்லாம் தெரியும். சில நேரங்களில் நமக்கு சில சந்தர்ப்பங்கள் கிடைக்கும்போது நாம் என்ன செய்கிறோம் என்பதன் அடிப்படையில் நமக்கு அவர் பலனளித்திடுவார். அதாவது, இங்க ஒரு நபர் 15 வயதில் மரித்துவிடுகிறார். அவன தேவனுக்கு ஊழியம் செய்ய விரும்பினான். ஊழியம் செய்து கொண்டுதான் இருந்தான். தேவன் அதை கணக்கில் வைத்துகொள்ளுவார். அதாவது, கவனிங்க, இதை நாம உத்தமத்திற்கு கிடைக்கும் கூலி என்பதாக பார்க்க முடியாது. எல்லா எண்ணத்திற்கும் மேலாக உயர்ந்த விதத்தில் நமக்கு நல்ல பலன் உண்டாகும். பவுல் கொடுப்பதை குறித்து சொல்லும்போது இதை சொல்லியிருக்கிறார்: “ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால், அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே அங்கிகரிக்கப்படும்.

சரி, இந்த வசனத்தை வியாக்கியானிக்க பலவிதங்கள் இருக்கிறது ஆனா என்னை பொறுத்தவரை பவுல் என்ன சொல்கிறார் என்றால் நீங்க நூறு ருபாய்அல்லது ஆயிரம் ரூபாய் கொடுக்க விரும்பினாலும் உங்களிடம் அதிகம் இருப்பதால் நீங்க அதிகமாக கொடுத்தாலும், நீங்க கொடுத்ததற்கு ஏற்ற பலன் நிச்சயம் உங்களுக்கு கிடைக்கும். சரி,

இதை கஞ்சத்தனத்திற்கு உதாரணாமாக எடுத்துகொள்ள முடியாது, “சரி, இதுவரைக்கும் எதையும் கொடுக்கலா ஆனா எங்கிட்ட அதிகமா இருந்தா நிச்சயம் கொடுப்பேன்.” இல்ல. தேவன் அதை மாயமாலம் என்பதாக பார்க்கிறார். ஆனா உண்மை என்னன்னா நம்மளால முடியாம இருந்தாலும் தேவனுக்காக செய்யணும் என்கிற எண்ணம் உங்க மனதிலும் என்னோட மனதிலும் இருக்கவேண்டியது முக்கியம். தேவன் அதை பார்த்து அதன் படி நமக்கு பலனளித்திடுவார்.

*****

**ஆன்கர்பெர்க்:** சரி, இப்ப ஒரு சுவாரஸ்யமான கேள்வி. பரலோகத்தில் ஏதாவது தண்டனைகள் இருக்கும் என்று நினைக்கிறீர்களா? நான் எதுக்காக இந்த மாதிரியான கேள்விகளை கேட்கிறேன்? அப்போஸ்தலர் பவுல் சொல்லியிருக்கிறார், “ஏனெனில் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும் படிக்கு, நாம் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டியது அவசியமாக இருக்கிறது.” சரீரத்தில் இருக்கும்போது நம்முடைய நற்கிரியைகளுக்கான பலனை பெறுவதில் நமக்கு வருத்தம் இருக்காது, ஆனா தீமைக்கு தகுந்த பலனை பெறுவோம் என்று வேதம் சொல்லும்போது அதற்கான உண்மையான அர்த்தம் என்ன? இயேசு கிறிஸ்து கீழ்படியாமல் வாழ்ந்ததற்காக நம் மீது கோபப்பட்டு நம்மை தண்டிப்பாரோ? இதை நீங்களும் கேட்கும்படி விரும்புகிறேன்:

**எர்வின் லட்சர்:** சரி, ஜான், அதாவது, முதல்ல, தண்டனை என்ற வார்த்தைக்கான அர்த்தத்தை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். ஒருவேளை இயேசு கிறிஸ்து ரொம்ப கோபப்பட்டு நம்மிடம் இருந்து எல்லாத்தையும் பரித்துகொள்வது தான் தண்டனையா என்று கேட்டால், அதற்கு பதில், இல்லை." அவர் சிலுவையில் தொங்கியபோது நமது தண்டனையை ஏற்றுகொண்டார். ஆனா இயேசுவின் கண்களை பார்க்கும்போது ஒருவேளை அவர் சோகமாக இருந்து தம்முடைய வாயை திறந்து நல்லது உண்மையும் உத்தமும் உள்ள ஊழியனே என்று சொல்லாமல் இருந்தால் அதுதான் என்னை பொறுத்தவரை பெரிய தண்டனையாக இருக்கிறது. அப்படி, இருந்தா, நா இயேசு கிறிஸ்துவுக்காக வாழாமல் என்ன தவறு செய்தேன் என்பதை நான் புரிந்துகொள்ள போதுமானதாக இருக்கும். அதாவது, இதை நினைவில் வைத்துகொள்ளுங்கள், நாம நியாயாசனத்தை பற்றி பேசி கொண்டு இருக்கிறோம், அந்த நியாயத்தீர்ப்பை அந்த நியாயாசனத்தை விட்டு அகற்ற நாம முயற்சிப்பதில் என்பத பலனும் இல்லை. அதனால தான் இந்த புத்தகத்தில் எழுதியிருக்கிறேன். அதை பற்றி ஆழமாக யோசித்தேன் ஏன்னா இது உண்மையில் ஜாக்கிரதையாக பார்க்கவேண்டிய ஒன்று. நாம் வாழ்ந்த வாழ்க்கைக்கு நீங்களும் நானும் இயேசு கிறிஸ்துவிடம் கணக்கு கொடுக்கவேண்டும். வாவ்.

**ஆன்கர்பெர்க்:** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும்போது அவர் நம் வாழ்க்கையை மதிப்பிடுவார்,

அவருடைய கண்களை பார்க்கும்போது சோகத்துடனும் அவருடைய வாயிலிருந்து நல்லது உண்மையும் உத்தமும் உள்ள ஊழியக்காரனே என்று வராவிட்டால், உங்களுடைய நித்தியத்தின் பங்குகளை நீங்கள் இழந்து விட்டீர்கள் என்று நினைத்துகொள்ளுங்கள் கண்ணீர்தான் மிஞ்சும், அந்த கண்ணீர் எவ்வளவு காலம் நீடிக்கும்? அந்த வேதனையை எத்தனை காலம் தாங்குவீர்கள்? நீங்க இந்த பூமியில் வாழ்ந்த நாட்களில் இயேசுவுக்காக வாழ்ந்திருக்கலாமே என்று எவ்வளவு நாள் துக்கிக்கபோகிறீர்கள்? திர. லட்சர் இந்த கேள்விகளுக்கான வேதாக பதிகளை கொடுக்கிறார். கவனியுங்கள்:

**எர்வின் லட்சர்:** சரி, அதனாலதான் வேதம் மிக தெளிவாக கூறுகிறதென்று நினைக்கிறேன், ஜான், அதாவது, "தேவன் நம்முடைய கண்ணீர் யாவற்றையும் துடைத்திடுவார்." பரலோகத்தின் முழு சந்தோஷத்தையும் நாம் அனுபவிக்க ஆரம்பிப்பதற்கும் அந்த கண்ணீர்கள் யாவும் துடைக்கப்படுவதற்கும் இடையில் இருக்கும் நேரம் எவ்வளவு என்று நமக்கு சரியாக தெரியாது. ஆனா ஒரு விஷயம் நமக்கு நல்லா தெரியும்: நம்முடைய வாழ்க்கை முறையானது நம்முடைய ஸ்தானத்தை நிர்ணயிக்கிறது.

சரி, ஏற்க்கனவே நாம சொன்னது போல, இங்க இரண்டு விதமான மக்களை பற்றி பேசுகிறோம் என்று சொல்ல முடியாது. பழைய உதாரணத்தில் சொல்லப்படுவது போல இதுவும் இருக்கும், "எல்லாருடைய பாத்திரமும் நிரம்பியிருக்கும் ஆனா சிலருடையது

மற்றவர்களை விட அதிகமாக நிரம்பியிருக்கும், அல்லது இன்னொரு உதாரணத்தையும் சொல்ல முடியும்: சாண்டேளியரை பயன்படுத்தும்போது, அதுல வித்தியாசமான பல்புகள் இருக்கும். சிலர் பெருசா பிரகாசமா இருக்கும் சிலது சின்னதா இருக்கும், எல்லாமே அந்த அறைக்குள் வெளிச்சத்தை கொடுக்க முயல்கிறது. ஆனா எல்லாமே ஒரே விதமான ஒளியை தருவது கிடையாது. இது பரலோகத்திற்கும் பொருத்தமாக இருக்கலாம். எல்லாரும் சந்தோஷமா இருப்பாங்க. எல்லாரும் ஆண்டவருக்கு சேவை செய்றாங்க. ஆனால் சிலருக்கு அதிக பொறுப்புகள் இருக்கும் ஏன்னா இயேசு கிறிஸ்துவையும் அவருடைய வார்த்தைகளையும் ஏற்று அதற்கு கீழ்படிந்து இந்த பூமியில் அவருக்காக ஜாக்கிரதையாக வாழுகிறார்கள்.

**ஆன்கர்பெர்க்:** உங்களில் சிலர் யோசிக்கலாம், சரி, ஜான், கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நாம வருத்தத்தையும் வேதனையையும் ஏன் கொஞ்சம் கண்ணீரும் விடவேண்டியிருக்கும் என்று நீங்கள் நம்புறீங்களா, அப்ப நீங்க கத்தோலிக்க உபதேசமான உத்தரிப்புஸ்தலத்தை பற்றி சொல்றீங்களா? அதற்கான பதில், இல்லை. ஏன்னு Dr. லட்சர் சொல்கிறார்:

**எர்வின் லட்சர்:** ஒரு காரியத்தை நாம புரிந்துகொள்ளவேண்டியது ரொம்ப முக்கியம் பலனை இழத்தல் என்று சொல்லும்போது பரலோகத்திற்கு போறதுக்கு முன்னால இருக்குனு சொல்ற நாம உத்தரிப்பு ஸ்தலதை பற்றி நாம சொல்லல. அதாவது, உத்தரிப்பு

ஸ்தலம் என்ற காரியமானது மத்திய காலத்தில் இருந்தவர்கள் பரலோகம் செல்கிற அளவிற்கு யாரும் பூரணமானவர்கள் அல்ல அதனால் அவர்கள் அதற்கு ஆயத்தப்பட ஒரு ஸ்தலம் இருக்கும் என்று சொல்வதினால் உண்டான ஒன்றாக இருக்கிறது. உத்தரிப்பு ஸ்தலம் என்பது பொதுவாக உத்தரிப்பில் இருந்து ஒருநாள் எல்லா பாவங்களும் நிவிர்த்தியாகி விட்டது என்ற எண்ணம் உண்டான பிறகு அவர்கள் பரலோகம் போக தகுதி ஆனவர்களாக கருதப்படுவார்களாம்

சரி, மார்டின் லூத்தர் நாம் கிறிஸ்துவை ஏற்றுகொண்டவிடனே தேவனை போல ஆகிறோம் விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்பதை கண்டறிந்த பிறகு, அவர் புரிந்துகொண்டார், இந்த, உத்தரிப்பு ஸ்தலம் என்பது அவசியமில்லை. நாம பூமியில் இருந்து உடனடியாக பரலோகம் சென்றிடுவோம் அதற்காக தவனுக்கு நன்றி சொல்லுங்க. கிறிஸ்து இங்கிருந்து நம்மை எடுத்து பிதாவிற்கு முன்பாக பூரணமாக நம்மை நிறுத்துகிறார். அதனால உத்தரிப்பு ஸ்தலம் தேவையில்லை.

நாம் பேடிகொண்டிருக்கிற விஷயம் என்னவென்றால் கிறிஸ்துவுக்கு கீல்படியாதபோது உண்டாகும் இயற்கையான விளைவுகள் மற்றும் கிறிஸ்து நம்மை சொந்த பிள்ளைகளை போல நடத்துகிற காரியமாகும். அதாவது, பிள்ளைங்க உண்மையாக இருக்கும்போது, அவங்களுக்கு நா பொறுப்புகளை கொடுக்க முடியும். “நல்ல விதத்தில பணத்தை கையாண்டு அதை செலவு செய்தால், அடுத்த முறை இன்னும் அதிக பணத்தை கொடுப்பேன். அபப்டி செய்யலைனா,

ஒழுக்கத்தை கற்றுக்கொள்ளவேண்டும். அங்க பலனை இழக்க நேரிடும்." பெற்றோர்களாக நாமளே இதை செய்யும்போது தேவனும் நம்மிடம் இதைதான் செய்கிறார்.

இப்ப, நாம அந்த ஆரம்ப நிலையை கடந்து நித்தியத்தை காண ஆரம்பிக்கும்போது, எல்லாரும் சந்தோஷமா இருப்பாங்க ஆனா ராஜயத்திற்குள் ஒரு வரைமுறை இருக்கும் அது என்றென்றைக்குமாக இருக்க வாய்ப்பு இருக்கு ஏன்னா இன்றைக்கு நாம் வாழ்கிற வாழ்க்கை கல்லூரி நுழைவு தேர்வு போல இருக்கும். நித்திய ராஜ்யத்தில் எந்த பகுதி நமக்கு நேர்த்தியாக இருக்குமென்று தேவன் பார்த்துகொண்டு இருக்கிறார். அதனால தான் உங்களோட இன்றைய வாழ்க்கை ரொம்ப ரொம்ப முக்கியமாக இருக்குது.

**ஆன்கர்பெர்க்:** சரி, நீங்க ஒரு கிறிஸ்தவராக இருந்தா பரலோகத்தில் நீங்க இயேசு கிறிஸ்துவிடம் பெற்றுகொள்ளப்போகிற பலன்களை குறித்து பேசிக்கொண்டு இருப்பதை கேட்டுட்டு இருக்கலாம். நீங்க ஒருவேளை யோசிக்கலாம், "நமக்கு இலட்சியம் இருக்கு. கிறிஸ்துவின் ராஜ்யத்தில் சிறந்தவனாக கருதப்படுவதற்கு என்னால் இயன்ற எல்லாத்தையும் நான் செய்ய போகிறேன். இலட்சியத்தோடு இருப்பது சரிதானா? கிறிஸ்துவை நேசிக்கிறேன் என்பதனால் எல்லாவற்றையும் செய்வதை விட்டுவிட்டு பரலோகத்தில் பலன்களை பெற வேண்டும் என்பதற்காக செயல்படுவது சரியா? இதை எப்படி சமநிலை படுத்துவீர்கள் அல்லது உங்களுடைய இலட்சியங்களையும்

உங்களுக்காக பெற விரும்புகிரபலங்கள் அல்லது உங்கள் எஜமானனை நேசிப்பதினால் செய்கிற காரியங்கள் என்று எப்படி வகையருத்திடுவீர்கள்? Dr. லட்சர் விளக்கமளிக்கிறார்.

**எர்வின் லட்சர்:** ஆமா, அதாவது, ஜான், சாதாரணமா இந்த விஷயத்தை சொன்னா அதாவது, "ராஜ்யத்தில் சிறந்த இடத்தை பெற பலனை பெற நான் செயல்படுவது சரிதானா? இது தவறான குறிக்கோளாக இருக்கிறது. ஆனா இதை இயேசுவை பிரியப்படுத்துவதோடு இணைத்துகொண்டால் பவுல் என்ன சொல்கிறார் என புரியும். அவர் சொல்கிறார், "நாம் அனைவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க்கவேண்டியிருப்பதால் நான் கிறிஸ்துவை பிரியப்படுத்த விரும்புகிறேன்."

இப்ப நம்முடைய நோக்கங்கள் எல்லாம் வித்தியாசமானதாக இருக்கிறது என்பதை புரிந்துகொள்ள முடியும். பரலோகத்தில் நான் பெரியவனாக இருக்கவேண்டும் என்பது முக்கியமல்ல. உண்மையில், இயேசு இதற்கு எதிராக இருப்பதுதான் சரி என்கிறார் - அதாவது பரலோகத்தில் உயர்ந்த இடம் வேணுன்னா, இந்த பூமியில் நீங்க தாழ்மையாக நடந்துகொள்ள வேண்டும். அதனால இதை பற்றி இப்ப நாம பேசல.

கவனிக்க வேண்டியது, இதுதான் நான் நேசிக்கிற ஒருவரை ஏமாற்ற விரும்புகிறேனா? நான் ஏமாற்ற நினைக்கிற இந்த நபர் தான் என்னை பார்த்து நீங்க உண்மையாக இருந்தால், நீ நினைப்பதற்கும் மேலான

ஆசீர்வாதங்களினால் உன்னை ஆசீர்வதிப்பேன் என்று சொல்லுகிறார். நான் உன்னுடைய நிலைக்கு மிஞ்சின விதத்தில் உன்னை ஆசீர்வதிக்க போகிறேன். இப்ப கேள்வி என்னன்னா, அவருக்கு ஊழியம் செய்ய ஆயத்தமாக இருக்கிறோமா? இலட்சியம், ஆமா. ஆனா பவுல் சொல்றாரு, வசனத்தின்படி பார்க்கும்போது அங்கு, என்னுடைய இலட்சியம் அவரை பிரியப்படுத்துவது தான் என்றிருக்கிறது. நம்முடைய வாழ்வில் அனைத்து காரியங்களும் இதன் அடிப்படையில் தான் அமைந்திருக்கவேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** இதை கேட்டுகொண்டிருக்கிறவர்களில் சிலர் ஒருவேளை கேட்கலாம், "இந்த பூமியில் நான் எப்படி வாழ்கிறேனோ அதன் அடிப்படையில் தான் கிறிஸ்து எனக்கு பலனளிப்பார் என்று எனக்கு புரிந்திருந்தால் அது என் வாழ்வில் ஏதாவது மாற்றத்தை உண்டாக்குவதாக இருக்கிறதா? அதற்கான பதில், நிச்சயம் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தும். இது வாழ்க்கையை குறித்த முற்றிலும் மாறுபட்ட கண்ணோட்டத்தை உண்டககிடும். Dr. லட்சர் விளக்குகிறார்.

**எர்வின் லட்சர்:** ஜான், பலன்கள் ஏற்படுத்துகிற வித்தியாசத்தை நீங்கள் யோசித்து பார்க்கும்போது, அதாவது, மக்கள் சொல்வாங்க, "என்னுடைய இலக்கின் மீது என்னுடைய கண்கள் பதிந்திருந்தால் அது வித்தியாசத்தை உண்டாக்குவதாக இருக்கிறதா? நா நித்தியத்தின் வெளிச்சத்தில் வாழ்கிறேனா? சரி, அது மிகப்பெரிய வித்தியாசத்தை உண்டாக்கும் ஏன்னா அது வாழ்வில் உள்ள சில நிலைகளை புரிந்து

ஏற்றுகொள்ள நமக்கு உதவியாக இருந்திடும். நான் உங்களுக்கு முற்றிலும் மாறுபாடான கண்ணோட்டத்தை உங்களுக்கு தருகிறேன்.

நான் உங்களுக்கு ஒரு கதை சொல்ல விரும்புகிறேன் ஒருமுறை சில மிஷனரிகள் ஒரு படகில் ஐரோப்பாவில் இருந்து நியூயார்க் வரை போயிட்டு இருந்தாங்க அதில அப்ப தற்செயலாக ஜனாதிபதி ரூஸ்வல்ட் டும் இருந்தார். அவருடைய பிரயாணத்தில வரை சந்திக்க நிறைய பெரிய ஆட்கள் இருந்தார்கள். இந்த மிஷனெரிகள் அசவுகரியமாக உணர்ந்ததால் அவங்க ஒருத்தருக்கு ஒருத்தர் சொல்லீட்டாங்க, “இங்க பாருங்க, இது நல்லாவா இருக்குது. இங்க ஜனாதிபதி இருக்காரு அவரை சுற்றிலும் நிறைய ஆலோசகர்கள் இருக்காங்க இவங்க பிசாசை சேவிக்கிறார்கள் இவங்க கப்பல்ல நல்லா குடிச்சு கூத்தடிச்சுட்டு வந்தாங்க இப்ப நியூ யார்க் வந்ததும் அவருக்கு கிடைக்கிற வரவேற்ப்ப பாருங்க. நாங்க உங்களுக்கு ஊழியம் செய்கிறோம், ஆண்டவரே, ராஜாதி ராஜாவே, கர்த்தாதி கர்த்தர். நாங்க நியூயார்க் வந்துட்டோம் எங்கள வரவேற்க யாருமே இல்ல. மிஷனெரிகளின் இருதயத்தில் இந்த வருத்தம் இருந்தது. ஆனா ஒருநாள் தேவன் அந்த வருத்தங்களை எடுத்துபோடுவார். இதை அவர் தனது மனைவிடம் இப்படியாக விளக்கினார். அதாவது, “இன்னொரு முறையாக தேவனிடம் இது சரியாக இல்லை என்று நான் சொன்னேன்.” அதற்கு நான், “சொன்னேன், அவங்க வீட்டிற்கு வரும்போது அதற்கான பலனை பெறுவார்கள். யாராவது

அவங்களுக்குன்னு இருப்பாங்க. நாங்க வீட்டுக்கு வந்தோம், அங்க யாருமே இல்ல." அது எப்படி இருந்ததுன்னா தேவன் அவங்கள பார்த்து, கொஞ்சம் நேரம் பொறு இன்னும் வீட்டிற்கு வரலன்னு சொல்றது போல இருக்கு."

ஓ, என் நண்பரே, இன்றைக்கு, வேதனையோடு இருப்பவர்களுக்கு இன்றைக்கு நான் சொல்லுகிறேன்; சிலர் இக்கட்டான சூழ்நிலைகளை கடந்து வந்திருக்கலாம். தவறாக நீங்கள் நடப்பட்டு இருக்கலாம். வாழ்க்கையில் பல வருத்தங்கள் இருக்கலாம். மற்றவர்கள் கனத்தை பெறுகிற விதத்தில் மற்றவர்களுக்காக நீங்கள் பலவிஷயங்களை செய்திருக்கலாம். ஜனங்கள் உங்களை உதாசீனப்படுத்தி இருக்கலாம். நீங்க காயப்பட்டவராக சாலையின் ஓரத்தில் படுத்திருப்பவராக இருக்கலாம். இருந்தாலும் நீங்க இயேசுவை நேசிக்கிறீங்க! அவரை சேவிக்க விரும்புகிறீர்கள். சரி, உங்களுக்கு ஒன்றை சொல்லுகிறேன் நீங்க இன்னும் வீட்டிற்கு வரல அவர் உங்களை அறிந்திருக்கிறார் புரிந்திருக்கிறார் நிச்சயம் உங்களுக்கு பலன் அளிப்பார்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.